# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**ஆணை நாள்: 04.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA3918/F/2019**

**திரு S.உதயசங்கர் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**செங்கல்பட்டு வட்டம் & மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **19.12.2018** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **01.02.2019,**<br>**14.03.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **29.04.2019** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (04.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு S.உதயசங்கர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு வட்டம் & மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் **19.12.2018** தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், செங்கல்பட்டு வட்டம், வண்டலூர் கிராமம்,

நிர்வாக அலுவலர், J.வெங்கடேஷ் பிரபு என்பவர் அரசு உத்தரவுபடி அவர் பணிபுரியும் கிராமத்தில் வசித்து வருகிறாரா அல்லது வேறு இடத்தில் வசித்துவருகிறாரா என்ற விபரம், வேறு இடத்தில் வசிக்க தனது மேல் அதிகாரியிடம் அனுமதி பெற்று உள்ளாரா அப்படி இருந்தால் அந்த உத்தரவு நகல், அரசு உத்தரவுபடி கிராம நிர்வாக அலுவலருக்கு பணிநேரம் குறிக்கப்பட்டுஉள்ளதா பணி நேரம் என்ன என்ற விபரம், தற்போது அவர் பொத்தேரி கோணாதி கிராமத்தில் சொந்த வீட்டில் வசித்து வருவதாக தெரிகிறது. அந்த வீட்டிற்கு அரசு அலுவலர் என்ற முறையில் முறையான அனுமதி பெற்று இருக்கிறாரா பெற்று இருந்தால் அந்த அனுமதி உத்தரவு நகல், மேலும் அந்த இடத்தின் மதிப்பு, வீட்டின் மதிப்பு தெரியப்படுத்தி உள்ளாரா என்ற விபரம், அந்த வீடு அவர் பெயரில் இல்லையென்றால் அவர் குடும்பத்தினர் பெயரில் இருக்கும் என்றால் அதன் நகல் தொடர்புடைய தகவல்களை 6 இனங்களில் வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு அவர்களுக்கு விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 01.02.2019 மற்றும் 14.03.2019 ஆகிய தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுக்களை மேல்முறையீட்டு அலுவலர்/ வருவாய் உட்கோட்ட நடுவர், கோட்டாட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு வட்டம் & மாவட்டம் மற்றும் முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ செங்கல்பட்டு வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு வட்டம் & மாவட்டம் ஆகியோர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதில் வருவாய் கோட்டாட்சியர்/ மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் 28.02.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். அதில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 29.04.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (04.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தனக்கு எந்தத் தகவலும் வழங்கவில்லை என தெரிவித்து தான் கோரிய தகவலை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 19.12.2019 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுமையாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத்**

தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

- மேல்முறையீட்டாளர் 19.12.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA3918/F/2019**

**பெறுநர்**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**செங்கல்பட்டு வட்டம் & மாவட்டம்.**

**மனுதாரர்**

**திரு S.உதய சங்கர், த/பெ. K.சண்முகம்,**
**எண்.436/4, கேளம்பாக்கம் ரோடு,**
**கொளப்பாக்கம் கிராமம், சென்னை - 600 127.**

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-17.11.2020